**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு சிடி மற்றும் டிவிடி பிளேயர் (CD and DVD Player) உடன் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் (CDs) வழங்குதல் – 2014–2015 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.4,35,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1D) எண்.04** **நாள்: 28.01.2015**

**ஜய–தை 14, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.75, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 26.07.2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண்.3282/சிபதி/2014, நாள் 07.11.2014 மற்றும் 29.12.2014.

----

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசு பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் 125 மாணவ / மாணவியருக்கு 'ஹெட்போனுடன் கூடிய குறுந்தகடு இயக்கும் சாதனம்' (CD Player) மற்றும் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் (CDs) வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும், ரூ.3,74,750/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–15 ஆம் ஆண்டு அரசு பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு பயிலும் 44 மாணவ / மாணவிகளுக்கு, இந்தாண்டு முதல் இத்திட்டத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த குறுந்தகடு இயக்கிக்கு (CD player) பதிலாக DVD playerம், 10 ஆம் வகுப்பு பயிலும் 70 மாணவ / மாணவிகளுக்கு குறுந்தகடு இயக்கியும் (CD player) மற்றும் மேற்படி 114 மாணவ மாணவிகளுக்கு பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் வழங்க ஏதுவாக, ரூ.4,35,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கவும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2014–15 ஆம் நிதியாண்டில், அரசு பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு பயிலும் 70 மாணவ/மாணவிகளுக்கு கடந்த ஆண்டைப் போலவே குறுந்தகடு இயக்கியும் (CD Player), 12 ஆம் வகுப்பு பயிலும் 44 மாணவ / மாணவியருக்கு மட்டும் இக்கல்வியாண்டு முதல் (2014–15) குறுந்தகடு இயக்கிக்கு பதிலாக (CD Player) டிவிடி பிளேயர் (DVD Player)ம், அனைத்து 114 மாணவ / மாணவிகளுக்கும் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் (CDs) வழங்குவதற்கு கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு, ரூ.4,35,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேற்படி தொகையினை நடப்பு நிதியாண்டில் உரிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இத்தொகையினை பெற்று

**[த.பி.பா]**

வழங்க, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | விவரம் | விலை விவரம் | மாணவர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | DVD Player (12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு) | ரூ.4541.48 | 44 | ரூ.1,99,825.12 |
| | | VAT Tax 14.50% | | ரூ.28,974.64 |
| 2. | CD Player (10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு) | ரூ.2349.34 | 70 | ரூ.1,64,453.80 |
| | | VAT Tax 14.50% | | ரூ.23,845.80 |
| 3 | பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் | | 114 | ரூ.17,900.00 |
| | | | | ரூ.4,34,999.36 |
| | **மொத்தம் (முழுத் தொகையாக)** | | | **ரூ.4,35,000.00** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AA–பார்வையற்றோர் பள்ளி – 24–பொருள்களும் வழங்கலும்”. (த.தொ.கு 2235 02 101 AA 2407)**

5. இவ்வாணை நித்துறையின் அலுவல் சாரா எண்.2939/நிதி(சந)/2015, நாள் 22.01.2015–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
<u>நகல்</u>
நிதித் (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.